RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்
DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 127 | மே.14 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# எளிதில் தப்பியது தவெக அரசு: நம்பிக்கை வாக்கெடுப்பில் விஜய்க்கு அதிமுக அதிருப்தி அணியும் ஆதரவு

## ஆதரவு 144; எதிர்ப்பு 22; நடுநிலை 5

சென்னை: மே.14-

தமிழக சட்டப்பேரவையில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் முதல்வர் விஜய் தலைமையிலான தவெக அரசு வெற்றி பெற்றது. அரசுக்கு ஆதரவாக 144 வாக்குகளும், எதிராக 22 வாக்குகளும் பதிவாகின. 5 பேர் நடுநிலை வகித்தனர்.

இந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உரையாற்றினார்கள். எதிர்க்கட்சியான திமுக நம்பிக்கை வாக்கெடுப்பில் இருந்து வெளிநடப்பு செய்தது. இதனையடுத்து, அரசியல் கட்சிகளின் தலைவர்களின் கருத்துக்கு முதல்வர் விஜய் பதிலளித்தார்.

இதனையடுத்து, பேரவை 99 உள்விதி 5ன் கீழ் எண்ணிக் கணிக்கும் முறையில் வாக்கெடுப்பு நடத்தப்படும் என சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் அறிவித்தார். இதனையடுத்து சட்டப்பேரவை உறுப்பினர்களை 6 பகுதிகளாக பிரித்து கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் ஒவ்வொரு பகுதிகளாக ஒவ்வொரு உறுப்பினரின் பெயரையும் குறிப்பிட்டு சபாநாயகர் அழைத்தார். இதில் முதலில் தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. அடுத்ததாக எதிர்ப்பு தெரிவிப்போர், நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். இதன் அடிப்படையில் நம்பிக்கை தீர்மானத்துக்கான வாக்குகள் எண்ணப்பட்டன.

இந்த தீர்மானத்தில் அதிமுகவில் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அணி எதிர்ப்பு தெரிவித்த நிலையில், எஸ்.பி.வேலுமணி தலைமையிலான அணி ஆதரவு தெரிவித்தது. வேலுமணி தரப்பில் ஹரி, எஸ்.காமராஜ், சி.விஜயபாஸ்கர், கே.பி.அன்பழகன், இசக்கி சுப்பையா, இரா.காமராஜ், சத்தியபாமா, லீமா ரோஸ், மரகதம் குமரவேல்,சுகுமார், சேகர், திலீபன் ஜெய்சங்கர், நட்ராஜ், நத்தம் விஸ்வநாதன், க.மோகன், ரவி மனோகரன், ராகேஷ், எம்.ஆர். விஜயபாஸ்கர், கே.சி.வீரமணி, ஜெயக்குமார், அருள்மொழித் தேவன், சி.வி.சண்முகம், பாலகிருஷ்ண ரெட்டி உள்ளிட்டோர் அரசுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

எடப்பாடி பழனிசாமி தரப்பில் ஓ.எஸ்.மணியன், அக்ரி கிருஷ்ணமூர்த்தி, கருப்பண்ணன், இ.சி.கோவிந்தராஜன், சு.பழனிசாமி, ராமச்சந்திரன், உஷாராணி, ஜெயசுதா, சம்பத் குமார், தளவாய் சுந்தரம், நல்லதம்பி, ராஜசேகர், ராஜேந்திரன், கோ. வெங்கடாசலம், வெற்றிவேல், வேலழகன், ஜெயசங்கரன் உள்ளிட்டோர் தீர்மானத்தை எதிர்த்தனர். பாமக, பாஜக இந்த வாக்கெடுப்பில் நடுநிலை வகித்தது.

இதன் அடிப்படையில் விஜய் தலைமையிலான தவெக அரசுக்கு ஆதரவாக 144 வாக்குகளும், எதிராக 22 வாக்குகளும் பதிவாகின. 5 பேர் நடுநிலை வகித்தனர். நம்பிக்கை வாக்கெடுப்பில் தவெக அரசு வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்தது என்ன?

புதிதாக ஆட்சி பொறுப் பேற்றுள்ள முதல்வர் விஜய் தலைமையிலான தவெக அரசு மீதான பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான வாக் கெடுப்புக்காக சட்டப்பேரவை நேற்று (மே 13) காலை 9.30 மணியளவில் கூடியது.

அவை கூடியதும், தமிழக முதல்வர் விஜய், நம்பிக்கை வாக்கெடுப்பு தீர்மானத்தை முன்மொழிந்தார். அதன் மீது வாக்கெடுப்பு நடப்பதாக சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் அறிவித்தார். அதன்பின்னர், பேரவையில் விவாதம் தொடங்கியது.



தொடர்ந்து காங்கிரஸ் சட்டமன்ற குழு தலைவர் கிள்ளியூர் எம்எல்ஏ ராஜேஷ் குமார் தவெக அரசுக்கு ஆதரவை அறிவித்தார். அவர் பேசுகையில், “தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தும், எந்த கட்சிக்கும் ஆட்சியமைக்க தனிப்பெரும்பான்மை இல்லாத நிலையில், மதச்சார்பற்ற கட்சிகளிடம் மட்டுமே விஜய் ஆதரவு கோரினார்.

அந்த வகையில் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள், விசிக, ஐயூஎம்எல் என்ற மதச்சார்பற்ற கட்சிகள் தவெகவுக்கு ஆதரவு வழங்கியது.

பெரிய கனவுகளுடன் தமிழகத்தில் காலூன்ற விரும்பிய பாஜக ஓரிடத்தில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. இந்தச் சூழலில் நிலையான, மதச்சார்பற்ற ஆட்சி வேண்டும் என்பதற்காக தவெக அரசுக்கு காங்கிரஸ் ஆதரவு அளிக்கிறது. எங்களின் தலைவர் ராகுல் காந்தியின் வழிகாட்டுதலின்படி தவெக அரசுக்கு என்றும் உறுதுணையாக இருப்போம்,” என்றார்.

தொடர்ந்து, மார்க்சிஸ்ட் கம்யூனிட்ஸ் கட்சி எம்எல்ஏ செல்லசாமி பேசுகையில், “தவெகவை தனிப்பெரும் கட்சியாக தமிழக மக்கள் தேர்வு செய்துள்ளனர். தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமைந்துவிடக் கூடாது என்பதற்காக தவெகவை சிபிஎம் ஆதரிக்கிறது. இந்த அரசு மதச்சார்பின்மை, கூட்டாட்சி, தமிழக சட்டமன்றத்தின் மாண்புகளை உயர்த்திப் பிடிக்க வேண்டி இந்த அரசுக்கு முழுமையான ஆதரவைத் தெரிவிக்கிறேன்,” என்றார்.

விசிக எம்எல்ஏ வன்னியரசு பேசுகையில், “தவெக அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வென்று 5 ஆண்டுகள் ஆட்சியை வெற்றிகரமாக நடத்தும் என நான் நம்புகிறேன். முன்கூட்டியே அதற்கு வாழ்த்துகிறேன். பாஜகவின் செயல்திட்டமான ஆளுநர் ஆட்சியைத் தடுக்கும் வகையில் தவெகவுக்கு விசிக ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது. தவெக அரசு தொகுதி மறுவரையறைக்கு எதிராக செயல்பட வேண்டும், தமிழகத்தில் ஆணவக் கொலைகளைத் தடுக்க தனிச் சட்டம் இயற்ற வேண்டும் என்று கோருகிறோம். மகளிர் உரிமைத் திட்டம், காலை உணவுத் திட்டம் போன்ற முந்தைய நலத் திட்டங்கள் தொடர வேண்டும்” என்றார்.

ஐயூஎம்எல்ஏ எம்எல்ஏ ஷாஜஹான் பேசுகையில், “மக்களின் மவுனப் புரட்சி இப்படியொரு மாற்றத்தை ஏற்படுத்தியது ஒரு வரலாற்று ஆச்சர்யம் தான். வழிபாட்டுத் தலங்கள், பள்ளிக் கூடங்கள், மக்கள் கூடும் இடங்களுக்கு அருகே உள்ள டாஸ்மாக் கடைகள் மூடலை வரவேற்கிறோம். மதச்சார்பின்மையை நிலைநாட்ட வேண்டும் என்று இந்த அரசுக்கு வேண்டுகோள் வைக்கிறோம். முதல்வர் விஜய் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சந்தித்தது வாழ்த்துகளுக்கு உரியது” என்றார்.

அமமுக சார்பில் மன்னார்குடியில் போட்டியிட்டு வென்ற எம்எல்ஏ காமராஜ் தவெக அரசுக்கு ஆதரவு தெரி வித்தார். அவர் பேசுகையில், “முதல்வர் விஜய்யை ஆளுமை மிக்கவராக தமிழக மக்கள் பார்க்கின்றனர். அதனாலேயே திருச்சியில் 400 ரவுடிகள் சரணடைந்துள்ளனர். தவெகவுக்கு நேற்றும், இன்றும், நாளையும் எனது ஆதரவு உண்டு,” என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம்எல்ஏ தளி ராமச்சந்திரன் பேசுகையில், ”குடியரசுத் தலைவர் ஆட்சி மூலம் பாஜக கொல்லைப்புறம் வழியாக தமிழகத்தில் ஆட்சி செலுத்தி விடக் கூடாது என்பதற்காகவே தவெகவுக்கு ஆதரவு அளித்துள்ளோம். ஒன்றிய அரசு மாநில உரிமை, சமூக நீதிக்கு எதிராக செயல்படுகிறது. அதற்கு எதிராக முதல்வர் விஜய் துணிவோடு செயல்பட வேண்டும் என்று வேண்டுகிறேன்” என்றார்.

பிரேமலதா கண்டனம்:

தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா பேசுகையில், “எதிர்க்கட்சிகளை எதிரிக் கட்சியாக நினைக்காமல் அனைவரையும் சந்தித்து ஒரு மாண்பை கடைப்பிடித்துள்ளீர்கள். அதற்கு வாழ்த்துகள். முதலில் 717 மதுக்கடைகளை மூடியது வரவேற்கத்தக்கது.

அதேவேளையில், இதுவரை தமிழக அரசியல் வரலாற்றில் நடைபெறாத குதிரை பேரம் நடந்ததாக வரும் தகவல்களால் நான் மனவேதனை அடைகிறேன். ஜோதிடர் ராதன் பண்டிட்டை அரசு அதிகாரியாக நியமித்ததை தமிழக மக்கள் சார்பாக கண்டிக்கிறேன். இதன்மூலம் தமிழக இளைஞர்களுக்கு நீங்கள் என்ன செய்தி சொல்ல வருகிறீர்கள் என்பதை நீங்கள் (விஜய்) தெளிவுபடுத்த வேண்டும். இந்த அரசு இளைஞர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கிறேன்.” என்றார்.

இன்று ஒற்றைத் தாமரைதான்...

பாஜக எம்எல்ஏ போஜராஜன் பேசுகையில், “நம்பிக்கை தீர்மானத்தில் எம்எல்ஏக்கள் அனைவரும் உணர்ச்சிவசப்பட்டு பாஜகவுக்கு எதிரான பிரச்சாரம் போல் பேசிவிட்டார்கள். நான் ஒற்றைத் தாமரை என்றார்கள். நாடாளுமன்றத்தில் 2 பாஜக உறுப்பினர்கள் மட்டுமே ஒரு காலத்தில் இருந்தனர். இன்று மத்தியிலும், பல்வேறு மாநிலங்களிலும் பாஜக ஆட்சியில் இருக்கிறது,” என்றார். நம்பிக்கையில்லா தீர்மானத்தில் பாஜக நடுநிலை காத்தது.

வாக்கெடுப்பில் விலகி நின்ற பாமக:

பாமக எம்எல்ஏ சவுமியா அன்புமணி பேசுகையில், “சமூக நீதி, ஜனநாயகம், சமத்துவம் என்பதே பாமகவின் கொள்கை. போதை யில்லா தமிழ்நாடு என்பது பாமகவின் நிலைப்பாடு. பாமக கொள்கைகள் தமிழக நலனை முன்னிறுத்துவது ஆகும். தமிழகத்தில் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடக்க வேண்டும். அதன் அடிப்படையில் அனைத்து சமூகத்தினருக்குமான விகித்தாச்சார பிரதிநித்துவத்தை ஏற்படுத்த வேண்டும். தனியார் வேலைவாய்ப்பில் 80% தமிழக இளைஞர்களுக்கு வழங்க சட்டம் இயற்ற வேண்டும் உள்ளிட்டவை பாமகவின் நோக்கங்கள். தவெக வெளி யிட்ட தேர்தல் அறிக்கையில் பாமகவின் கொள்கைகளை ஒத்துப்போகும் வாக்குறுதிகள் இருந்தன. இந்நிலையில், தமிழக முன்னேற்றத்திலும், நலனிலும் அக்கறை கொண்டு பாமக வாக்களிப்பதிலிருந்து விலகி நிற்கிறது,” என்றார். பாமகவுக்கு 4 எம்எல்ஏக்கள் உள்ளனர்.

தவெக அரசுக்கு அதிமுக ஆதரவில்லை: இபிஎஸ்

தவெக அரசு மீதான நம்பிக்கை தீர்மானத்தை எதிர்ப்பதாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்தார். இது குறித்து அவர் பேசுகையில், “அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணி 47 பேர் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளனர். தவெக அரசுக்கு 65% வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை என்பதை இங்கே நான் நினைவு கூற விரும்புகிறேன்.

அதிமுக அரசின் ஆட்சிக் காலத்தில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் கொண்டு வரப்பட்டன. மேலும், அரசுப் பள்ளியில் கல்வி கற்கும் ஏழை, எளிய மாணவர்கள் மருத்துவக் கல்வி கற்க நீட் தேர்வை எதிர்கொள்ள 7.5% உள் இடஒதுக்கீடு முறையையும் கொண்டு வந்தது. மேலும், அவர்களின் குடும்பச் சூழலை கருத்தில் கொண்டு அவர்களுக்கான கல்விச் செலவுகளையும் அரசு ஏற்றது.

அதிமுகவில் 47 சட்டமன்ற உறுப்பினர்கள் இரட்டை இலை சின்னத்தில் நின்று எம்எல்ஏக்கள் ஆகியுள்ளனர், அவர்களுக்கு அமைச்சர் பதவி வழங்குவதாகக் கூறி ஆளுங்கட்சியினர் தங்கள் பக்கம் ஈர்க்க முயற்சிப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளது. இதனை ‘தூய சக்தி என்று தன்னை கூறிக் கொள்ளும் முதல்வர் விஜய் ஏற்கக் கூடாது,” என்று பழனிசாமி கூறினார்.

திமுக வெளிநடப்பு:

நம்பிக்கை வாக்கெடுப்பிலிருந்து திமுக வெளிநடப்பு செய்தது. சட்டப்பேரவையில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், தவெக அரசு குதிரை பேரத்தில் ஈடுபட்டதாகக் கண்டித்தார். மேலும், திமுக அரசு கொண்டு வந்த மகளிர் உரிமைத் தொகை, காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டங்கள் தொடர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## “குதிரை பேரம் புகார்களுக்கு முதல்வர் விளக்கமளிக்க வேண்டும்” : பிரேமலதா விஜயகாந்த்

சென்னை: மே.14-

குதிரை பேரம் நடந்ததாக எதிர்க்கட்சிகள் அனைவரும் குற்றம்சாட்டும் நிலையில், அது குறித்து முதல்வர் விஜய் பேச வேண்டும் என தேமுதிக எம்எல்ஏ பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் சட்டப்பேரவையில் பேசும்போது, “எதிர்க்கட்சிகளை எதிரிக் கட்சிகளாக நினைக்காமல் அனைவரையும் சந்தித்து ஒரு மாண்பையும், மரபையும் முதல்வர் விஜய் ஏற்படுத்தியிருக்கிறார். அதை நான் வரவேற்கிறேன்; அதேபோல முதல் அறி விப்பிலேயே சிங்கப் பெண் படை, மதுக்கடைகளை மூடுவோம் என்று சொன்னதும் மக்களால் வரவேற்கப்பட்டது. அந்த வகையில் 717 மதுக்கடைகளை மூடியது ஒட்டுமொத்த தமிழக மக்களாலும் வரவேற்கப்பட்டது. மீனவர்கள் விவகாரம் குறித்து கடிதம் எழுதியதும் வரவேற்கத்தக்கது.

முதல்வர் பதவி ஏற்கும்போது, தனது ஆட்சி வெளிப்படையான ஆட்சியாக இருக்கும் எனச் சொன்னீர்கள். சொல்லும், செயலும் ஒன்றாக இருக்க வேண்டும். குதிரை பேரம் நடந்ததாக எதிர்க்கட்சிகள் அனைவரும் குற்றம்சாட்டுகின்றன. இதுவரை தமிழக அரசியல் வரலாற்றில் நடந்தது இல்லை. இது குறித்து இன்று பேசவே மனவேதனை அடைகிறேன்.

யாரும் முகத்தை மூடிக்கொண்டு செல்ல வேண்டிய அவசியமில்லை என முதல்வர் விஜய் கூறியிருந்தார்; ஆனால் முதல்வரை சந்திக்க முகத்தை மூடிக்கொண்டு வந்தது யார் என பதிலளிக்க வேண்டும். குதிரை பேரம் நடந்ததாக ஏராளமானோர் கூறியிருக்கும் நிலையில் அது குறித்து முதல்வர் பேச வேண்டும்.

முதல்வரின் அரசியல் பிரிவில் ரத்தன் பண்டிட்டை நியமனம் செய்ததற்கு ஒட்டுமொத்தமாக எதிர்ப்பு இருக்கிறது. அவரை அரசு உயர் பதவியில் கொண்டு வந்தது ஏற்புடையதல்ல. இளைஞர்கள் நம்பிக்கையில் வாக்கு அளித்து இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏமாற்றம் ஏற்படும்; தேவைபட்டால் முதல்வருக்கு தனிபட்ட முறையில் நியமித்துக் கொள்ளலாம்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது, முதல்வர் விஜய்யின் சிறப்பு அதிகாரியாக ரத்தன் பண்டிட் நியமிக்கப்பட்ட உத்தரவை தமிழக அரசு திரும்பப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## புதுச்சேரியில் 5வது முறையாக முதல்வரானார் ரங்கசாமி: 2 அமைச்சர்கள் பதவியேற்பு

புதுச்சேரி: மே.14-

புதுச்சேரி முதல்வராக ரங்கசாமி 5வது முறையாக இன்று பதவியேற்றார்.

புதுவையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி தலைவர் ரங்கசாமி தலைமையில் மீண்டும் கூட்டணி ஆட்சி அமைந்தது. இதையொட்டி புதுச்சேரி மாநில முதல்வர், அமைச்சர்கள் பதவியேற்பு விழா துணைநிலை ஆளுநர் மாளிகை வளாகத்தில் இன்று காலை 9.47 மணிக்கு நடந்தது.

இதில் புதுவை மாநில முதல்வராக 5வது முறையாக ரங்கசாமி பதவியேற்றார். அவருடன், அமைச்சர்களாக பாஜக நமச்சிவாயம் , என்ஆர் காங்கிரஸ் மல்லாடி கிருஷ்ணா ராவ் பதவியேற்றனர்.

முதல்வர், அமைச்சர்களுக்கு துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். இந்த பதவியேற்பு விழாவில் பாஜக தேசிய தலைவர் நிதின் நபின், சந்தோஷ்ஜி மற்றும் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர்.



நிகழ்வில் முதலில் வந்தே மாதரம், தேசிய கீதம் இசைக்கப்பட்டு 3வதாக தமிழ் தாய் வாழ்த்து பாடப்பட்டது. மல்லாடி தெலுங்கில் பதவி ஏற்றார்.

புதுச்சேரி முதல்வராக 5வது முறையாக பதவியேற்ற பின்பு முதல்வர் ரங்கசாமி சட்டப்பேரவைக்கு நடந்து வந்தார். அங்கே, காவல்துறை அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு தனது அறைக்கு வந்து இருக்கையில் அமர்ந்தார். அதைத்தொடர்ந்து முக்கிய கோப்புகளில் கையெழுத்திட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர், “புதுச்சேரி முதல்வராக 5வது முறையாக பதவியேற்றது மகிழ்ச்சியாக உள்ளது. நிறைய திட்டங்களுக்கு இன்று கையெழுத்திட்டுள்ளோம். மஞ் சள் ரேஷன் அட்டைத்தாரர்கள் காப்பீடுத் திட்டத்தில் பயன்பெற வழி செய்துள்ளோம். சிவப்பு ரேஷன்அட்டைதாரர்களுக்கு மட்டும் காப்பீடு இருந்தது. தற்போது புதுச்சேரியில் மஞ் சள் ரேஷன் அட்டைதாரர்கள் அரசு மருத்துவமனைகளில் இலவசமாகக் கிடைக்காத சிகிச்சைகளில் வெளி மருத்துவமனைகளில் கட்டணம் செலுத்தி பெற ரூ. 3 லட்சம் அளவுக்கு மருத்துவ செலவுகள் திரும்ப அளிக்கப்படும் கோப்புக்கு கையெழுத்திட்டேன். இந்நிதியை மாநில அரசு தரும்.

சேதராப்பட்டில் இளைஞர்களுக்கு வேலை கொடுக்கும் வகையில் தொழிற்பேட்டை கொண்டு வரும் கோப்பில் கையெழுத்திட்டுள்ளேன்.

புதுச்சேரி இந்திராகாந்தி மருத்துவக் கல்லூரியில் ‘நமோ புதுச்சேரி’ புற்றுநோய் மருத்துவமனை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படும். இதற்கான உள்கட்டமைப்பு, மேம்பட்ட புற்றுநோய் சிகிச்சை வசதிகள், தொழில்நுட்பக் கருவிகள், ஆராய்ச்சிக்கான சூழ்நிலை நிறுவுதல், சிறப்பு மருத்துவர்களைத் தெரிவு செய்து பயிற்சி அளித்தல் மூலம் முழுமையான, தரமான புற்றுநோய் சிகிச்சையை புதுச்சேரி மக்கள் பெறமுடியும் கோப்புக்கு கையெழுத்திட்டேன். விளையாட்டு மேம்பாட்டுத்காக ஸ்டேடியம் கட்டும் கோப்பில் கையெழுத்திட்டுள்ளேன்.

இந்த ஒரு வாரத்துக்குள் அமைச்சரை பதவியேற்பு நடக்கும். அமைச்சர்களுக்கு இலாக்காகள் ஒதுக்கும் போது சொல்கிறேன். இப்பணிகள் நிறைவடைந்த பிறகு டெல்லி சென்று பிரதமர் மோடியை கண்டிப்பாக சந்திப்பேன்” என்றார்.



# 12ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் சிறப்பான மதிப்பெண்களைப் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு

திருப்பத்தூர்,மே,14-

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், நடந்து முடிந்த 12ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் சிறப்பான மதிப்பெண்களைப் பெற்றுள்ள மாணவ மற்றும் மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திர வல்லி.இ. அ. ப (1205,2026) பரிசுத்தொகை அளித்துப் பாராட்டினார். இன்று கல்வித் திருப்பத்தூர் மாவட்ட அளவில் மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கிடையேயான தரவரிசையில் வெங்களாபுரம் வேளாங்கண்ணி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவி ஜோதிகா மற்றும் வாணியம்பாடி ஆதர்ஷ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவி ரூபநீ ஆகியோர் தலா 505 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளின் வரிசையில், திருப்பத்தூர் மாவட்ட அரசு மாதிரிப் பள்ளி மாணவி யஷ்வந்தினி 584 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளார். கசினாநாயக்கன்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவி நதியா, 580 மதிப்பெண்களும், வாணி இஸ்லாமியா அரசு நிதியுதவி பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி நைவாசல் சுஹா 575 மதிப்பெண்களும் பெற்று பள்ளிக்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.12ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத்தேர்வு முடிவுகள் கடந்த (08.05.2026) அன்று வெளியிடப்பட்டது. திருப்பத்தூர் மாவட்டத்தில் 6406 மாணவர்கள் மற்றும் 7041 மாணவியர்கள் என மொத்தமாக 13447 பேர் தேர்வு எழுதினர். அவர்களில் 5846 மாணவர்கள் மற்றும் 6751 மாணவியர்கள் எனஃமொத்தமாக 12597 மாணவர்கள் தேர்ச்சி அடைந்துள்ளனர். இது 93,63 விழுக்காடு தேர்ச்சி விகிதம் ஆகும் என மாவட்ட ஆட்சியர் க.சிவ சௌந்திரவல்லி.இ.ஆ.ப. தெரிவித்துள்ளார். இந்நிகழ்வில், முதன்மைக் கல்வி அலுவலர் இராபுண்ணியகோட்டி, மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அலுவ ப்.சத்தியபிரபா, மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார்) மற்றும் தொடர்புடைய பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்

# விசில் அரசில் ‘சக்கரவர்த்தி’க்கு ஜாக்பாட்? -உள்குத்து உளவாளி

விசில் மே,14-

விசில் கட்சியையும் விடுதலைக்காக போராடிய கட்சியையும் கூட்டு சேர்த்து வைக்க தேர்தலுக்கு முன்பே ரொம்பவே மெனக்கிட்டார் அந்த ‘சக்கரவர்த்தி’. இதற்காக விடுதலைக் கட்சியின் ‘இளம் தலைவர்’ ஆசியுடன் விசில் தலைவரை தனியே சந்தித்தும் பேசினார் ‘சக்கரவர்த்தி’. இதனையடுத்த நகர்வுகளில் விசில் தலைவருக்கு ரொம்பவே நம்பிக்கைக்கு பாத்திரமானவராக மாறி விட்டாராம் ‘சக்கரவர்த்தி’. தேர்தலுக்குப் பிறகு விடுதலைக் கட்சியை முதல் ஆளாக விசில் கட்சிக்கு ஆதரவு தெரிவிக்க வைத்ததிலும் ‘சக்கரவர்த்தியின்’ முழு சப்போர்ட் இருக்கிறதாம். இதையடுத்து, சொந்தக் கட்சியினரோடு சேர்ந்து விசில் கட்சியினரும் இப்போது ‘சக்கரவர்த்திக்கு’ சபாஷ் போட்டு வருகிறார்கள்.




இந்த நிலையில், விசில் அரசாங்கத்தில் நிதித்துறையை கவனிக்க நிதி ஆளுமை மேஜிக் தெரிந்த ‘அறிவுஜீவி’ ஒருவரை தேடுகிறார்களாம். தற்போது பதவியேற்றுள்ள மாண்புமிகுக்களில் திருப்பதி கடவுளின் பெயர் கொண்டவரும் ‘ராஜப்புள்ளி’யின் பெயரும் அதற்கான பரிசீ லனையில் இருந்தாலும் ஐஐடி மாணவரான ‘சக்கரவ ர்த்தியையும்’ ஒரு சாய்ஸாக வைத்திருக்கிறாராம் விசில் தலைவர்.மலைக்கோட்டை கிழக்கு இடைத் தேர்தலில் ‘சக்கரவர்த்தியை’ நிறுத்தி ஜெயிக்க வைத்து அவரிடம் நிதிப் பொறுப்பை ஒப்படைத்துவிடலாமா என நிர்வாகிகளிடம் ஆலோசனை நடத்தினாராம் விசில் தலைவர். இதனால், தங்களுக்கு வரவேண்டிய ஒரு எம்எல்ஏ விடுதலைக் கட்சிக்கு போய்விடுமே என எதிர்கருத்து வந்ததாம்.

இருந்த போதும் ‘சக்கரவர்த்தி’ சாய்ஸை இன்னும் கைவிடவில்லையாம் தலைவர். இந்த நிலையில் தான், “தமிழக அரசின் ஒவ்வொரு 100 ரூபாய் வருவாயிலும் 20 ரூபாய்க்கு மேல் கடனுக்கான வட்டிக்காக செலவாகிறது. இது மற்ற பெரிய மாநிலங்களை விட அதிகம். வட்டி, சம்பளம், ஓய்வூதியம் என கட்டாய செலவினங்களுக்கே 40 ரூபாய் போய்விடுவதால் கஜானா காலியாக இருக்கிறது” என்று கரிசனமான கருத்து ஒன்றை பதிவிட்டி ருக்கிறார் ‘சக்கரவர்த்தி’.

அதேநேரத்தில், விசில் கட்சியின் இன்னொரு தரப்பிலோ, “அதிமுக ‘முகத்தால்’ காலியாகி இருக்கும் ராஜ்யசபா பதவிக்காக ‘சக்கரவர்த்தியை’ நிறுத்தி ஆதரித்து அவரை டெல்லிக்கு அனுப்பும் திட்டமும் இருக்கு” என்றும் சொல்கிறார்கள்.

# செவிலியர் தினத்துக்கு அரசியல் கட்சி தலைவர்கள் வாழ்த்து

சென்னை:மே,14-

உலக செவிலியர் தினத்தை ஒட்டி அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர். ஆண்டுதோறும் உலக செவிலியர் தினம் மே மாதம் 12ம் தேதி கொண்டாடப்படுகிறது.

நவீன செவிலியர் பயிற்சி முறையை நிறுவிய பிளாரன்ஸ் நைட்டிங் கேல் அம்மையார் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் இந்த கொண்டாட்டம் நடைபெறுகிறது.

சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவ மனையில் உலக செவிலியர் தினத்தை பிளாரன்ஸ் நைட்டிங்கேல் உருவப் படத்தை கோலமாக இட்டு செவிலியர்கள் கொண்டாடினர்.பாமக தலைவர் அன்புமணி: மனித தேவதைகளாக மாறி மருத்துவப் பணி செய்யும் செவிலியர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

உயிருக்குப் போராடும் நோயாளிகளைகாப்பாற்றும் மருத்துவர்கள் மனித கடவுள் என்றால், நோயாளிகளை அன்பு, கனிவு, அக்கறை காட்டியும், ஆறுதல் அளித்தும் கவனித்துக் கொள்ளும் செவிலியர்கள் தான் மனித தேவதைகள்.

எந்தவித வெறுப்பும், சலிப்பும் இல்லாமல் மனிதர்களுக்கு சேவை செய்யும் செவிலியர்களின் உழைப்பும், தியாகமும் போற்றப்பட வேண்டும். அவர்களை இந்த நாளில் வணங்குவோம்; நன்றி செலுத்துவோம்.அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன்: மருத்துவமனையின் இன்றியமையாத பணியாளர்களாகவும், மனிதநேயத்தின் உயிர்நாடியாகவும் திகழும் செவிலியர்கள் அனைவருக்கும் உலக செவிலியர் தின நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பு, தியாகம், பொறுப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, தங்களின் உயிரையும் பொருட்படுத்தாமல் மக்களின் உயிர்களைப் பாதுகாக்கும் தன்னலமற்ற பணியில் ஈடுபட்டுவரும் செவிலியர்களின் சேவை மனப்பான்மையை எந்நாளும் போற்றி வணங்குவோம்.

மதிமுக பொதுச் செயலாளர் வைகோ: நோயாளிகளைக் காப்பாற்ற மருந்து இருந்தால் மட்டும் போதாது. நோயின் தன்மை அறிந்து, நோயாளிகளை தேற்றும் தாயுள்ளம் வேண்டும். எனவே செவிலியர்கள் தாய்க்கு நிகரானவர்கள்.தற்போது ஆண் செவிலியர்களும் இப்பணியில் இருக்கிறார்கள். சாதி மதங்களுக்கு அப்பாற்பட்டு, தாய்க்கு நிகரான அன்பும் பரிவும் கொண்டு, பொறுமையுடன் ஆற்றும் அரும் பணிதான் செவிலியர் பணி. புனிதமான சேவையில் ஈடுபட்டுள்ள செவிலியர்களுக்கு செவிலியர் நாள் நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

# பார்சிலோனா அணியின் வெற்றிக் கொண்டாட்டத்தில் பாலஸ்தீனத்துக்கு ஆதரவளித்த யமால்

பார்சிலோனா:மே,14-

நடப்பு லா லிகா சீசனில் சாம்பியன் பட்டம் வென்ற பார்சிலோனா அணியின் வெற்றிக் கொண்டாட்டத்தில் பாலஸ்தீனத்தின் கொடியை ஏந்தி கவனம் ஈர்த்தார் அந்த அணியின் நட்சத்திர வீரர் லாமைன் யமால்.ஸ்பெயினின் லா லிகா கால்பந்து தொடரில் நடப்பு சீசனில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளது பார்சிலோனா அணி. திங்கட்கிழமை அன்று ரியல் மாட்ரிட் அணியை 20 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வீழ்த்தியது. இதன் மூலம் நடப்பு சீசனில் 91 புள்ளிகளை பெற்று பட்டியலில் முதலிடம் பிடித்தது. அதன் மூலம் பார்சிலோனா அணி நடப்பு சீசனில் சாம்பியன் ஆனது.இந்த வெற்றியை தொடர்ந்து பார்சிலோனா அணி



வீரர்கள் திறந்தவெளி பேருந்தில் வெற்றி உலா சென்றனர். அதில் யமாலும் பங்கேற்றார். 18 வயதான அவர், சர்வதேச கால்பந்து அரங்கில் நட்சத்திர வீரராக அறியப்படுகிறார். சர்வதேச அளவில் ஸ்பெயின் அணிக்காகவும், கிளப் அளவில் பார்சிலோனா அணிக்காகவும் அவர் விளையாடுகிறார். அப்போது தனது கையில் பாலஸ்தீன கொடியை யமால் ஏந்தி இருந்தார். அது இப்போது கவனம் பெற்றுள்ளது. அந்த படங்களை தனது சமூக வலைதள பக்கத்தில் அவர் பகிர்ந்துள்ளார். இது குறித்து பார்சிலோனா அணியின் பயிற்சியாளர் ஹன்சி பிளிக் விளக்கம் கொடுத்துள்ளார். “இது போன்ற செயலை நான் விரும்புவதில்லை. இந்த கொடி விவகாரம் குறித்து நான் யமாலிடம் பேசி இருந்தேன். இதை அவரது விருப்பம் என தெரிவித்தேன். அவருக்கு இப்போது 18 வயது ஆகிறது. இது அவரது முடிவு. மக்கள் மகிழ்ச்சியடைய நாங்கள் கால்பந்து விளையாடி வருகிறோம்” என்று அவர் தெரிவித்தார்.இந்த வெற்றி உலா பார்சிலோனா நகரில் நடைபெற்றது. இதில் சுமார் 7.5 லட்சம் பங்கேற்றதாக தகவல். அதில்தான் பாலஸ்தீனத்துக்கு தனது ஆதரவை யமால் தெரிவித்திருந்தார்.இஸ்ரேல் காசா மோதல்: கடந்த 2023 அக்டோபரில் ஹமாஸ் தீவிரவாத அமைப்பினர் இஸ்ரேலில் நடத்திய தாக்குதலால் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தரப்புக்கு இடையிலான மோதல் மிக தீவிரமானது. இதையடுத்து இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் பாலஸ்தீனத்தை சேர்ந்தவர்களில் சுமார் 72 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்.இதில் 20 ஆயிரம் பேர் குழந்தைகள்/சிறுவர்கள். இஸ்ரேலின் தாக்குதல் தீவிரத்தில் இருந்த போது ஒரு மணி நேரத்துக்கு ஒரு குழந்தையும், தற்போது பசி/ஊட்டச்சத்து குறைபாடு உள்ளிட்ட காரணங்களால் நாளொன்று ஒரு குழந்தையும் காசாவில் உயிரிழந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த அக்டோபரில் போர் நிறுத்தம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

அவ்வப்போது பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக விளையாட்டு வீரர்கள் தங்கள் ஆதரவை தெரிவிப்பது உண்டு. இது கால்பந்து, சைக்கிளிங் மற்றும் கூடைப்பந்தாட்டத்தில் எதிரொலித்து வருகிறது. தற்போது இந்தப் பட்டியலில் யமால் இணைந்துள்ளார்.

# ரூ.100 கோடி மோசடி செய்த சாப்ட்வேர் இன்ஜினியர் கைது

புதுடெல்லி:மே,14-

கர்நாடக தலைநகர் பெங்களூருவில் உள்ள சாப்ட்வேர் நிறுவனத்தில் ரவி ரத்தோர் (31) பணியாற்றி வந்தார். ஆண்டுக்கு ரூ.30 லட்சம் வரை சம்பளம் பெற்ற இவர். சில ஆண்டுகளுக்கு முன்பு பணியில் இருந்து விலகி, போலி ஆன்லைன் டிரேடிங் தளத்தை தொடங்கினார்.இந்த தளத்தை நம்பி நூற்றுக்கணக்கான பங்குச் சந்தை முதலீட்டாளர்கள் சுமார் ரூ.100 கோடியை முதலீடு செய்தனர். இந்நிலையில், டெல்லியை சேர்ந்த முதலீட்டாளர் ஒருவர், அந்த டிரேடிங் தளம் மீது காவல் நிலையத்தில் மோசடி புகார் அளித்தார். இதன் பேரில் டெல்லி



போலீஸார் விசாரணை நடத்தி பெங்களூருவில் தங்கியிருந்த ரவி ரத்தோரை கைது செய்தனர்.இது குறித்து டெல்லி போலீஸார் கூறும்போது, "மத்திய பிரதேசத்தின் சனாவாத் நகரில் ரவி ரத்தோர் சில ஆண்டுகளுக்கு முன்பு கால் சென்டரை அமைத்துள்ளார். இதன் மூலம் நாடு முழுவதும் பங்குச் சந்தை முதலீட்டாளர்களை குறிவைத்து மோசடி நடைபெற்று உள்ளது. முதல் கட்ட விசாரணையில் ரவி ரத்தோர் போலி ஆன்லைன் டிரேடிங் தளம் மூலம் ரூ.99.77 கோடி மோசடி செய்திருப்பது தெரியவந்துள்ளது.மோசடி பணத்தின் மூலம் மத்திய பிரதேசத்தின் இந்தூரில் ஆடம்பர மாளிகையை அவர் கட்டி உள்ளார். ஏராளமான அடுக்குமாடி குடியிருப்புகளை வாங்கி உள்ளார். ஆடம்பர கார்களை வாங்கி குவித்துள்ளார். ரவி ரத்தோர் பயன்படுத்திய லேப் டாப்புகள், மொபைல் போன்களை பறிமுதல் செய்து ஆய்வு செய்து வருகிறோம்" என்றனர்.

# தமிழக உளவுத் துறை ஐ.ஜி.யாக அஸ்ரா கார்க் நியமனம்அஸ்ரா கார்க்

சென்னை:மே,14-

தமிழகத்தின் உளவுத் துறை ஐ.ஜி.யாக அஸ்ரா கார்க் நியமிக்கப்பட்டுள்ளார்.வடக்கு மண்டல ஐ.ஜியாக உள்ள அஸ்ரா கார்க், தமிழக காவல் துறையின் உளவுத் துறை ஐ.ஜி.யாக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலின்போது உளவுத் துறை ஐ.ஜி.யாக இருந்த செந்தில்வேலன் மாற்றப்பட்டு, அவினாஷ் குமாரை நியமித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது. இந்தச் சூழலில்,



தற்போது அஸ்ரா கார்க் உளவுத் துறை ஐ.ஜி.யாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தவெக தலைவர் விஜய் கலந்துகொண்ட கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த சம்பவத்தில், அந்த வழக்கை விசாரிக்க அப்போதைய திமுக அரசு அஸ்ரா கார்க்கை நியமித்தது நினைவுகூரத்தக்கது.

# விசாகப்பட்டினத்தில் 65 அடி உயர திரிசூலம்

விசாகப்ப ட்டினம்: மே,14-

ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தில் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் 65 அடி உயரத்தில் உடுக்கையுடன் கூடிய திரிசூலம் அமைக்கப்பட்டுள்ளது.விசாகப் பட்டினத்தில் உள்ள கைலாசகிரி மலைப்பகுதி பிரபல சுற்றுலா தலமாகும். இங்குள்ள சிவன், பார்வதி சிலைகள் மிகவும் பிரசித்தி பெற்றவையாகும். வார இறுதி நாட்கள், பண்டிகை நாட்கள் மற்றும் கோடை விடுமுறையில் இங்கு அதிக சுற்றுலாப் பயணிகளை காணலாம்.

இந்நிலையில் இப்பகுதியை மேலும் அழகாக்க, விசாகப்பட்டினம் நகர வளர்ச்சி கழகம் (விஎம் ஆர்டிஏ) இங்கு 65 அடி உயரத்தில் உடுக்கையுடன் கூடிய திரிசூலம் சிலை அமைக்க முடிவு செய்தது. இதற்கான பணி



கள் விரைவாக நடைபெற்று, சமீபத்தில் அமைச்சர் நாராயணா பூஜைகள் நடத்தி திரிசூலத்தை பொது மக்களின் பார்வைக்கு கொண்டு வந்தார். மலை உச்சியில் உள்ள இந்த திரிசூலத்தை நகரில் எந்த இடத்தில் இருந்தும் காண முடியும்.இரவில் எல்இடி விளக்கு வெளிச்சத்தில் திரிசூலம் ஜொலிக்கிறது. 65 அடி உயரம் கொண்ட திரிசூலத்தில் உடுக்கை மட்டும் 18 அடி அகலமும், 10 அடி உயரமும் கொண்டுள்ளது. ரோப்வே உள்ள இந்த மலைக்கு தற்போது சுற்றுலா பயணிகள் அதிகம் வர தொடங்கி விட்டனர். சுமார் 8 மாதமாக திரிசூலம் கட்டுமானப் பணிகள் நடந்தன. சமீபத்தில் இதன் திறப்பு விழா நடந்து முடிந்துள்ளது.

இது குறித்து ஆந்திர கல்வி அமைச்சர் நாரா லோகேஷ் நேற்று சமூக வலைதளத்தில், "குஜராத்தில் உள்ள சோம் நாத் கோயில் புனரமைக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைவதை நாம் கொண்டாடும் இந்த வேளையில், ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தில் உள்ள கைலாசகிரியில் 65 அடி உயர திரிசூலம் அமைக்கப்பட்டிருப்பது ஆந்திராவுக்கு பெருமை தரும் விஷயமாகும். இது நமது இந்திய கலாச்சாரத்தையும், ஆன்மீகத்தையும் நாட்டுக்கு எடுத்துரைக்கிறது" என்று குறி ப்பிட்டுள்ளார்.

# கச்சா எண்ணெய் கையிருப்பு: மத்திய அமைச்சர் ஹர்தீப் விளக்கம்

புதுடெல்லி:மே,14-

இந்திய தொழில் கூட்டமைப்பின் (சிஐஐ) வருடாந்திர வணிக உச்சி மாநாடு டெல்லியில் நேற்று நடைபெற்றது. இதில் மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி பங்கேற்றார்.



நிகழ்ச்சிக்கு இடையில் அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது: இந்தியாவில் கடந்த 4 ஆண்டுகளில் எரிபொருள் விலையில் எந்த உயர்வும் ஏற்படவில்லை. ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டதன் காரணமாக எரிபொருள் கொள்முதல் மற்றும் விநியோகத்தில் உலகின் பல நாடுகள் கடுமையான சிக்கல்களை சந்தித்தன. அந்நாடுகளில் எரிபொருள் விலை 50 % முதல் 60 % வரை உயர்ந்தன. ஆனால் நம் நாட்டில் அத்தகைய சூழல் இல்லை.

இந்தியாவிடம் தற்போது முக்கிய எரிசக்திப் பொருட்களின் கையிருப்பு போதுமான அளவை விட அதிகமாகவே உள்ளது. இதில் 60 நாட்களுக்குப் போதுமான கச்சா எண்ணெய், 60 நாட்களுக்குப் போதுமான எல்என்ஜி, 45 நாட்களுக்குப் போதுமான எல்பிஜி கையிருப்பு உள்ளது. எனவே விநியோகம் சார்ந்த எந்தப் பிரச்சினையும் இல்லை. அரசு நிலைமையை தினமும் உன்னிப்பாக கண்காணித்து வருகிறது. எனவே மக்கள் பீதியடைய வேண்டாம். இவ்வாறு ஹர்தீப் சிங் புரி கூறினார்.

# பூங்காநகர் உட்பட 13 ரயில் நிலையங்களில் 495 சிசிடிவி கேமராக்கள் நிறுவும் பணி தீவிரம்

சென்னை: மே,14-

பயணிகள் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பை பலப்படுத்தும் வகையில், சென்னை ரயில்வே கோட்டத்தில் பூங்கா நகர், தண்டையார்பேட்டை, கொருக்குப்பேட்டை உட்பட 13 ரயில் நிலையங்களில் 495 சிசிடிவி கேமராக்கள் நிறுவும் பணி முழுவீச்சில் நடைபெறுகின்றன.

சென்னை ரயில்வே கோட்டத்தில் சென்னை கடற்கரை செங்கல்பட்டு, சென்னை சென்ட்ரல் அரக்கோணம் உட்பட பல்வேறு புறநகர் ரயில் வழித்தடங்களில் உள்ள ரயில் நிலையங்களில் சிசிடிவி கேமராக்களை நிறுவி, தீவிரமாக கண்காணிக்கப்




படுகின்றன.அந்த வகையில், கடந்த நிதியாண்டில் மட்டும், எண்ணூர், அத்திப்பட்டு, மீஞ்சூர், பொன்னேரி, கவரைப்பேட்டை, வில்லிவாக்கம், கொரட்டூர், திருமுல்லைவாயல், ஆவடி, பட்டாபிராம், நெமிலிச்சேரி, திருநின்றவூர், செவ்வாப்பேட்டை, புட்லூர், ஏகாட்டூர், கடம்பத்தூர், செஞ்சி பனம்பாக்கம், வண்ணாரப்பேட்டை, ராயபுரம் மற்றும் மணவூர் ஆகிய 26 ரயில் நிலையங்களில் 923 சிசிடிவி கேமராக்கள் செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.அந்த இடங்களில் நிகழ்நேர கண்காணிப்புத் திறனை மேம்படுத்தி, பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக, 13 ரயில் நிலையங்களில் சிசிடிவி கேமராக்கள் நிறுவும் பணி முழுவீச்சில் நடைபெறுகின்றன.

இதுகுறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறியதாவது: ரயில் நிலையங்களில் பயணிகள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், பல்வேறு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.இதன் ஒருபகுதியாக, பயணிகள் அதிகம் வந்து செல்லும் ரயில் நிலையங்களில் பாதுகாப்பை உறுதி செய்ய, சிசிடிவி கேமராக்கள் நிறுவி, தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது.அந்தவகையில், பூங்கா நகர், தண்டையார்பேட்டை, கொருக்குப்பேட்டை, கத்திவாக்கம், வியாசர்பாடி ஜீவா, பெரம்பூர், பெரம்பூர் கேரேஜ் ஒர்க்ஸ், அம்பத்தூர், வேப்பம்பட்டு, மோசூர், புளியமங்கலம், திருத்தணி மற்றும் ஆம்பூர் உள்ளிட்ட 13 முக்கிய ரயில் நிலையங்களில் 495 சிசிடிவி கேமராக்களை நிறுவும் பணி தற்போது நடைபெறுகின்றன. இதன் மூலம் பயணிகள் மற்றும் செயல்பாட்டு மண்டலங்களில் கண்காணிப்பு மேலும் பலப்படுத்தப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# திருப்பூர் அருகே சாலை விபத்து: காவலர் உள்பட 6 பேர் உயிரிழப்பு



திருப்பூர்:மே,14-

திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவில் அருகே நின்று கொண்டிருந்த லாரி மீது கார் மோதிய விபத்தில் காவலர் உள்பட 6 பேர் உயிரிழந்தனர்.

காங்கயத்தை அடுத்த வெள்ளகோவில் உத்தாண்ட குமார வலசு பிரிவு அருகே கோவை திருச்சி தேசிய நெடுஞ் சாலையில் காவல் சோதனைச்சாவடி உள்ளது. இந்த சோதனைச்சாவடியில் அதிகாலை 3 மணி அளவில் சாலைத் தடுப்பு மீது சவுக்கு பூட்டி ஏற்றி வந்த லாரி மோதியது.இதையடுத்து, லாரியை சிறிது தூரம் தள்ளிநிறுத்திவிட்டு லாரி ஓட்டுநர் மற்றும் பணியில் இருந்த காவலர் ரவிசந்திரன் (45) ஆகியோர் அதனை சரி செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அதே திசையில் வேகமாக வந்த கார் காவலர் ரவிசந்திரன், லாரி ஓட்டுநர் மீதும் மோதி விட்டு லாரியின் மீதும் பலமாக மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காவலர், லாரி ஓட்டுநர், காரில் இருந்த 4 பேர் என மொத்தம் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இதுகுறித்த தகவலின்பேரில் சம்பவ இடத்துக்கு விரைந்த போலீஸார் 6 பேரின் சடலத்தையும் மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும், விபத்து குறித்து வெள்ளகோவில் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். முதல்வர் விஜய் நிதியுதவி அறிவிப்பு: இதனிடையே, "வெள்ளக்கோவில் காவல் நிலைய காவலர் ரவிச்சந்திரன் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். காவலர் ரவிச்சந்திரனை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிந்தவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு ரூ.30 லட்சம் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்." என்று முதல்வர் விஜய் கூறியுள்ளார்.

# "இன்ஸ்டா ரீல்ஸ் ஆட்சியாக இல்லாமல் ரியல் ஆட்சியாக நடத்துங்கள்" பேரவையில் விஜய்க்கு உதயநிதி அறிவுரை



சென்னை:மே,14-

"இன்ஸ்டா ரீல்ஸ் ஆட்சியாக இல்லாமல் ரியல் ஆட்சியாக நடத்துங்கள்" என தமிழக முதல்வர் விஜய்க்கு சட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அறிவுரை வழங்கியுள்ளார்.தமிழக சட்டப்பேரவையில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பின் மீது பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், "ஆளுங்கட்சி 4.93 கோடி வாக்குகளில் 1.72 கோடி தான் பெற்றுள்ளது. மீதமுள்ள 3.21 கோடி பேர் உங்களுக்கு எதிராக வாக்களித்துள்ளனர். 65% மக்களால் நிராகரிக்கப்பட்ட இந்த ஆட்சி மீது எங்களுக்கு மட்டுமல்ல உங்களுக்கு வாக்களித்த மக்களுக்கே கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கை குறைந்து வருகிறது.

சட்டப்பேரவைத் தேர்தலில் பெரும்பான்மை மக்கள் உங்களுக்கு வாக்களிக்கவில்லை. நம்பிக்கையின்றி முதல்வர் விஜய் 2 இடங்களில் போட்டியிட்டார். 2 இடங்களில் வெற்றி பெற்ற விஜய் ஒரு இடத்தில் ராஜினாமா செய்திருக்கிறார். ஆனால், தொகுதி மக்களுக்கு இதுவரை ஒரு நன்றி கூட தெரிவிக்கவில்லை.திமுக கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன்தான் தவெக ஆட்சி அமைத்துள்ளது. குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிடக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காக மட்டுமே, அவர்கள் உங்களுக்கு வெளியில் இருந்து ஆதரவு கொடுத்துள்ளார்கள். இப்போதும் நாங்கள் திமுக கூட்டணியில்தான் இருக்கிறோம் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.உங்கள் கொள்கை எதிரி என்று சொன்ன பாஜக தலைமையிலான என்டிஏ கூட்டணியில் போட்டியிட்ட சட்டமன்ற உறுப்பினரை அந்தக் கட்சித் தலைவருக்கே தெரியாமல் உங்கள் கட்சிக்கு ஆதரவு தர வைத்திருக்கிறீர்கள்.

அந்தக் கட்சியின் தலைவர் டிடிவி இது குறித்து பேசும்போது, "ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே குதிரை பேரத்தில் ஈடுபடுகிறார்கள். மாற்றம் மாற்றம் என பேசினார்கள். இது மாற்றமில்லை, துர்நாற்றம்," என சொல்லியிருக்கிறார்.தற்போது, அதிமுக பிளவு பட்டுள்ளது. அதில் ஒரு பிரிவினர் உங்களுக்கு ஆதரவு தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு நடந்துதான் ட்விஸ்ட். அந்தப் பிரிவில் ஒருவரது வீட்டிற்கு புதிய சோஃபா செல்கிறது. பின்னாலேயே புதிய முதல்வரும் செல்கிறார். 'புஷ்பா' பட பாணியில் தான் இந்த ஆட்சி நடைபெற்று வருகிறது.திமுக கூட்டணிக் கட்சிகள், மற்றும் சில கட்சிகளிடம் இருந்து எம்எல்ஏக்களை கடன் பெற்று ஆட்சி நடத்துகிற முதல்வர், தான் கொடுத்த போலி வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது எனத் தெரிந்த உடனே, திமுக அரசு வளர்ச்சிக்காகப் பெற்ற கடன் குறித்து தவறான தகவல்களைக் கொடுத்து மக்களைத் திசைதிருப்பப் பார்க்கிறார். பெரும்பான்மை இல்லாத இந்த அரசு மக்களுக்கு நல்லாட்சி தரும் என்ற நம்பிக்கை இல்லை.

தமிழக மற்றும் இந்திய வரலாற்றிலேயே கட்சி தாவுவதற்கு முன்னதாகவே, அந்தக் குழுவின் தலைவர் வீட்டுக்குச் சென்று அவருக்கு இன்விடேஷன் கொடுத்ததை இந்தியாவில் யாரும் பார்த்ததில்லை. சி பி கி ழி நி ணி , சி பி கி ழி நி ணி னு சொன்னீர்களே ஆனால், அதுக்கு பின்னால் ணி நீ சி பி கி ழி நி ணி இருப்பதாக மக்கள் சந்தேகப்படுகிறார்கள். கூவத்தூரையே மிஞ்சும் அளவிற்கு நீங்கள் அடிக்கிற கூத்தைப் பார்க்கும்போது, இந்த அரசு எத்தனை நாட்களுக்கு நீடிக்கப்போகிறதோ என்ற ஐயம் மக்களுக்கு வரத்தொடங்கிவிட்டது.

நடப்பதையெல்லாம் பார்த்து,'பெரிய தவறை செய்துவிட்டோமோ' என உங்களுக்கு வாக்களித்த மக்களே நினைக்கத் தொடங்கியுள்ளனர். இதை பிரதிபலிக்கும் வகையில் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் வெளிநடப்பு செய்கிறோம்.

மகளிர் உரிமை தொகைக்காக காத்திருக்கிறார்கள். குழந்தைகள் காலை உணவுத் திட்டத்துக்காக காத்திருக்கிறார்கள். நீங்கள் அவகாசம் கேட்டீர்கள். எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால், காத்திருப்பவர்களை ரொம்ப காலம் காத்திருக்க வைத்து விடாதீர்கள். இன்ஸ்டாகிராம் ரீல்ஸ் ஆட்சியாக இல்லாமல் ரியல் ஆட்சியாக நடத்துங்கள். மக்கள் கேட்பதும் அதைத் தான்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல் அளித்த தோழியின் தந்தைக்கு 20 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனை



சென்னை: மே,14-

தோழியின் வீட்டுக்கு விளையாடச் சென்ற சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல் அளித்த தோழியின் தந்தைக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை விதித்து, சென்னை போக்சோ சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.சென்னை, வியாசர்பாடி பகுதியில் கணவரை இழந்த பெண் தனது இரு மகள்களுடன் வசித்து வருகிறார். பகல் நேரத்தில் வேலைக்கு செல்லும் அந்த பெண், தனது இரு மகள்களை வீட்டிலேயே தனியாக விட்டு விட்டுச் செல்வது வழக்கம்.கடந்த 2021ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அந்த பெண் வேலைக்கு சென்றபோது, 13 வயதாகும் மூத்த மகள் பக்கத்து வீட்டில் உள்ள தனது தோழி வீட்டுக்கு விளையாடச் சென்றுள்ளார். அப்போது அந்த வீட்டில் இருந்த தோழியின் தந்தை அந்த சிறுமியை பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளார்.இது தொடர்பாக, அந்த சிறுமி தனது தாயாரிடம் தெரிவிக்கவே, எம்கேபி நகர் போலீஸார் போக்சோ சட்டத்தின் கீழ், அந்த நபரை கைது செய்தனர்.இந்த வழக்கு சென்னை போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். பத்மா முன்பாக நடந்தது. அப்போது, அரசு தரப்பில் சிறப்பு வழக்கறிஞர் எஸ்.அனிதா ஆஜராகி குற்றச்சாட்டை நிரூபித்தார்.இதையடுத்து, நீதிபதி குற்றம் சாட்டப்பட்ட தோழியின் தந்தைக்கு 20 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். அதேபோல, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தமிழக அரசு ரூ. 4.1 லட்சத்தை இழப்பீடாக வழங்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

# திட்ட அனுமதி கோப்புகள் காரணமின்றி தேங்கக்கூடாது: சிஎம்டிஏ உறுப்பினர் செயலர் அறிவுறுத்தல்



சென்னை:மே,14-

தமிழக முதல்வரின் தூய்மையான, வெளிப்படையான நிர்வாகத்தைப் பேணும் வகையில், திட்ட அனுமதி உள்ளிட்ட எந்த மனுக்கள் தொடர்பான கோப்புகளும் இனி காரணமின்றி மேசைகளில் தேங்கக்கூடாது என சிஎம்டிஏ உறுப்பினர் செயலர் பிரகாஷ் துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.இதுதொடர்பாக, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் ஜி.பிரகாஷ் துறை அதிகாரிகளுக்கு விடுத்துள்ள சுற்றறிக்கை:தமிழக முதல்வரின் பதவியேற்பு விழாவின்போது வலியுறுத்தப்பட்ட தூய்மையான மற்றும் வெளிப்படையான நிர்வாக நடைமுறைகளை பேணும் வகையில், பொது மக்களுக்கு சேவை வழங்கும் பணிகளில் எந்தவொரு தடை, தாமதமும் ஏற்படாமல் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் அனைத்து அதிகாரிகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.அதன்படி, திட்ட அனுமதி, பணி நிறைவுச் சான்றிதழ், லேஅவுட் ஒப்புதல், மறு வகைப்பாடு உள்ளிட்ட மனுக்கள் குறித்த கோப்புகளை நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டும்.தொழில்நுட்ப ரீதியிலான சிக்கல்கள், சட்டப் பிரச்சினைகள் அல்லது துறை ஒருங்கிணைப்பு சிரமங்கள் காரணமாக கோப்புகள் நிலுவையில் இருந்தால், அவற்றின் நிலை குறித்து திங்கள் கிழமைகளில் நடத்தப்படும் துறை ரீதியிலான ஆய்வுக் கூட்டங்களில் விளக்கமளித்து விரைந்து தீர்வு காண வேண்டும்.இனி எந்த மனுவோ, கோப்புகளோ காரணமின்றி மேசைகளில் தேங்கக்கூடாது. சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் தினசரி கோப்புகளை கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.குறிப்பாக, அதிகாரிகள் நேர்மையுடனும், பாரபட்சமின்றியும், வெளிப்படைத் தன்மையுடனும், லஞ்ச லாவண்யங்களுக்கு இடம் கொடுக்காமல் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் செயல்பட வேண்டும்.

துறையின் எந்த நிலையிலும் தேவையற்ற கால விரயம், சுணக்கம், கோப்புகள் தேக்கம் இருக்கக்கூடாது. முறைகேடு மற்றும் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் அதிகாரிகள், ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த உத்தரவு உடனடியாக அமலுக்கு வருகிறது என அதில் எச்சரித்துள்ளார்.

# மகாராஷ்டிராவில் காலை மின்கம்பத்தில் மோதிய விமானம்

## உயிர் தப்பிய பைலட்

பாராமதி:மே,14-

மகாராஷ்டிரா மாநிலம் புனே அருகே பாராமதி பகுதியில் 'ரெட்பேர்ட்' விமான பயிற்சி அகாடமி செயல்பட்டு வருகிறது.



இப்பகுதியில் கடந்த சில ஆண்டுகளாக இதே பயிற்சி அகாடமியைச் சேர்ந்த விமானங்கள் அடிக்கடி தொழில்நுட்ப கோளாறு காரணமாக அவசர தரையிறக்கம் செய்யப்பட்டு விபத்துகளில் சிக்கி வருகின்றன. இந்த சூழலில் இன்று காலை 8.50 மணி அளவில், கோஜுபாவி கிராமம் அருகே 2 பேர் அமரக்கூடிய சிறிய பயிற்சி விமானம் ஒன்று வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டிருந்தது. இந்த விமானத்தில் பயிற்சியில் இருந்த ஒரு இளம் விமானி மட்டும் தனியாக பயணம் செய்தார்.விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே திடீரென தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதால், கட்டுப்பாட்டை இழந்து மிகவும் தாழ்வாக பறக்கத் தொடங்கியது. அப்போது எதிர்பாராத விதமாக அங்குள்ள ஒரு மின் கம்பத்தில் மோதிய விமானம், தரைப்பகுதியில் பயங்கரமாக மோதி நின்றது. இதில் விமானத்தின் முன்பகுதி பலத்த சேதமடைந்தாலும், அதிர்ஷ்டவசமாக பயிற்சி விமானி காயமின்றி உயிர் தப்பினார். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த எஸ்பி சந்தீப் சிங் கில் தலைமையிலான போலீசார் மீட்பு பணியில் ஈடுபட்டனர். இது குறித்து விசாரணைக்கு உத்தரவிட்டுள்ள விமான போக்குவரத்து ஒழுங்குமுறை ஆணையம், 'விபத்து நடந்ததற்கான தொழில்நுட்ப காரணம் மற்றும் இன்ஜின் கோளாறு குறித்து ஆய்வு செய்யப்படுகிறது' என்று தெரிவித்துள்ளது

# எரிபொருள் சிக்கனத்தில் இரட்டை நிலைப்பாடு; பிரதமர் மோடியின் வேண்டுகோளை கண்டுகொள்ளாத பாஜக நிர்வாகிகள்

## அணிவகுத்த கார்களால் மக்கள் கடும் அவதி



போபால்: மே,14-

பிரதமரின் எரிபொருள் சிக்கன வேண்டுகோளை மீறி மத்தியப் பிரதேசத்தில் பாஜகவினர் 200 கார்களில் அணிவகுப்பு நடத்தியது பெரும் சர்ச்சையாகியுள்ளது. எரிசக்தி தட்டுப்பாடு மற்றும் நாட்டின் பொருளாதாரத்தை காக்க வேண்டி, பிரதமர் மோடி கடந்த 10ம் தேதியன்று நாட்டு மக்களுக்கு ஏழு முக்கிய கோரிக்கைகளை விடுத்திருந்தார். ஓராண்டுக்கு தங்கம் வாங்க கூடாது, ஒர்க் பிரம் ஹேம் பணி, பொது போக்குவரத்து பயன்பாடு, எரிபொருள் சிக்கனம் போன்றவற்றை வலியுறுத்தினார்.மோடியின் கோரிக்கையை தொடர்ந்து அடுத்த 48 மணி நேரத்திற்குள், கடந்த 11ம் தேதியன்று மத்தியப் பிரதேச பாடநூல் கழகத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்ட சவுபாக்யா சிங் தாக்கூர், உஜ்ஜைனியில் இருந்து போபாலுக்கு பதவி ஏற்கச் சென்றார். இதற்காக சுமார் 200க்கும் மேற்பட்ட சொகுசு கார்களில் அவரது ஆதரவாளர்கள் பிரம்மாண்ட அணிவகுப்பு நடத்தினர். இந்த அணிவகுப்பால் உஜ்ஜைனி போபால் நெடுஞ்சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. உச்சக்கட்ட வெயிலில் ஆம்புலன்ஸ்கள் மற்றும் பள்ளி பேருந்துகள் என பல வாகனங்கள் பல மணி நேரம் சாலையில் தேங்கி நின்றதால் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகினர். இதுகுறித்து வீடியோ வெளியிட்டுள்ள காங்கிரஸ் கட்சி, 'ஒரு பக்கம் பொதுமக்களிடம் எரிபொருளை குறைக்கச் சொல்லும் பிரதமர், தனது கட்சி நிர்வாகிகள் ஆடம்பரத்திற்காக நூற்றுக்கணக்கான கார்களில் செல்வதை கண்டுகொள்வதில்லை; பாஜகவின் சிக்கன கோரிக்கை என்பது வெறும் பொதுமக்களுக்கு மட்டும்தானா?' என்று கடுமையாக விமர்சித்துள்ளது. இதற்கு பதிலளித்த மாநில பாஜக தலைவர் ஹேமந்த் கண்டேல்வால், 'பிரதமரின் வேண்டுகோள் தெளிவானது என்றாலும், நடத்தையில் மாற்றம் என்பது மருந்து வேலை செய்வது போல மெதுவாகத்தான் மாறும்' என்று விளக்கம் அளித்தார். இதற்கிடையே, மற்றொரு பாஜக தலைவர் சத்யேந்திர பூஷன் சிங், இரிக்ஷாவில் அலுவலகம் வந்தாலும், அவருக்கு பின்னால் 40க்கும் மேற்பட்ட பெட்ரோல் மற்றும் டீசல் வாகனங்கள் அணிவகுத்து வந்ததைச் சுட்டிக்காட்டி சமூக வலைதளங்களில் பொதுமக்கள் இந்தச் செயலை விமர்சித்து வருகின்றனர்

# ஜோதிடர் ராதன் பண்டிட் நியமனம் ரத்து: இடதுசாரிகள், காங்கிரஸ், தேமுதிக வரவேற்பு



சென்னை:மே,14-

முதல்வர் விஜய்யின் ஜோதிடர் ராதன் பண்டிட் வெற்றிவேல் 'முதல்வரின் அரசியல் பிரிவு சிறப்பு அதிகாரி'யாக நியமனம் செய்யப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்பட்டதை இடதுசாரிகள், காங்கிரஸ், தேமுதிக கட்சிகள் வரவேற்றுள்ளன.

முதல்வர் விஜய்யின் ஜோதிடர் ராதன் பண்டிட் வெற்றிவேல் முதல்வரின் அரசியல் பிரிவு சிறப்பு அதிகாரியாக நேற்று நியமனம் செய்யப்பட்டார். முதல்வர் விஜய்யின் ஜோதிடர் ராதன் பண்டிட் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டதற்கு திமுக, காங்கிரஸ், விசிக, சிபிஎம், சிபிஐ உள்ளிட்ட கட்சிகள் கண்டனம் தெரிவித்தன.மேலும், இன்று சட்டப்பேரவையில் பேசிய தேமுதிக எம்எல்ஏ பிரேமலதா, ஜோதிடர் ராதன் பண்டிட் நியமனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஜோதிடர் ராதன் பண்டிட் நியமனத்துக்கு எதிர்ப்பு வலுத்த நிலையில், தவெக அரசு இன்று அந்த உத்தரவை ரத்து செய்தது. இதற்கு பல்வேறு அரசியல் கட்சிகளும் வரவேற்பு தெரிவித்துள்ளன.இது குறித்து மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம் வெளியிட்ட அறிக்கையில், 'மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் எதிர்ப்பைத் தொடர்ந்தும், தவறை உணர்ந்தும் ஜோதிடர் ரிக்கி ராதன் பண்டிட் பணி நியமனத்தை அரசு திரும்பப் பெற்றுள்ளது. விமர்சனங்கள், குறைகள் சுட்டிக்காட்டப்படும்போது அதை ஏற்றுச் சரிசெய்துகொள்வது என்ற அணுகுமுறை தொடர வேண்டும். அரசின் இந்த முடிவை வரவேற்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா வெளியிட்ட அறிக்கையில், 'ராதன் பண்டிட்டை அரசு பணியில் நியமித்ததை ரத்து செய்த தமிழக முதல்வர் விஜய்க்கு வாழ்த்துக்கள். ஜோதிடர் ராதன் பண்டிட் என்பவரை அரசு பணியில் நியமித்ததை கண்டித்து, இன்று (13.05.2026) சட்டப்பேரவையில் நான் எடுத்துரைத்த கருத்துக்கு உடனடியாக நியமன ஆணையை ரத்து செய்த தமிழக முதல்வர் விஜய்க்கும், தமிழக அரசின் நடவடிக்கைக்கும் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறோம்' எனத் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் எம்.பி ஜோதிமணி வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து ஜோதிடர் ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல் நியமனத்தை மாண்புமிகு முதல்வர் ஜோசப் விஜய் ரத்து செய்துள்ளதை வரவேற்கிறேன். வரும் காலங்களில் மாணவர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட எதிர்காலத் தலைமுறைக்கு எடுத்துக்காட்டாக முதல்வர் மற்றும் தமிழ்நாடு அரசின் செயல்பாடுகள் அமையும் என்று நம்புகிறேன்.

போகவேண்டிய தூரம் நிறைய உள்ளது. ஒவ்வொரு அடியும் கவனத்துடன் எடுத்து வைக்கப்பட வேண்டும். எதிர்க்கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் முதல்வரின் பண்பு உண்மையிலேயே பாராட்டுக்குரியது' எனத் தெரிவித்துள்ளார்.இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்ட அறிக்கையில், 'தமிழ்நாடு அரசின் முதல்வர் ஜோசப் விஜய்க்கு சிறப்பு அரசியல் அலுவலராக ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல் நியமிக்கப்பட்டார். ஜோதிட சாஸ்திரத்தை தொழிலாக கொண்ட ஒருவரை அரசின் அதிகார மையத்தில் அரசியல் சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டது அரசியலமைப்பு சட்டத்தின் மதச்சார்பற்ற பண்புக்கு மாறானது. அறிவியல் கருத்துக்களையும், கண்ணோட்டத்தையும் வளர்க்க வேண்டும் எனில் அவரது பணி நியமனம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என பல தரப்பில் இருந்தும் விமர்சனங்கள் எழுந்தன. இவற்றைக் கருத்தில் கொண்ட தமிழ்நாடு அரசு, ரிக்கி ரதன் பண்டிட் வெற்றிவேல் நியமனத்தை திரும்பப் பெற்றுக் கொண்டது. விமர்சனங்களுக்கு காது கொடுத்து, உரிய நடவடிக்கை எடுத்துள்ள அரசின் ஜனநாயக பண்புக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு நன்றி பாராட்டுதல்களை தெரிவிப்பதுடன், இந்த ஆரோக்கியமான அணுகுமுறை தொடர்ந்திட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது' எனத் தெரிவித்துள்ளார்



■ மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் உறுப்பு தானம் செய்து மறைந்த சி. தேவநாதன் உடலுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.மதுரை மாவட்டம், தெத்தூர் அருகே கோழிஞ்சிப்பட்டி, கிழக்குத் தெருவைச் சேர்ந்த சி. தேவநாதன் மறைவிற்குப் பின்னர், அவரது குடும்பத்தினர் உயர்ந்த மனிதநேய உணர்வுடன் உறுப்பு தானத்திற்கு ஒப்புதல் அளித்தனர். அவரது இரண்டு சிறுநீரகங்கள், கல்லீரல் மற்றும் பிற உடல் உறுப்புகள் தானமாக வழங்கப்பட்டு, பலரின் உயிரைக் காக்கும் அரிய கொடையாக அமைந்துள்ளது.மறைந்தவரின் குடும்பத்தினருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்ததுடன், இந்த தன்னலமற்ற மற்றும் தியாகமிக்க முடிவிற்கு மனமார்ந்த பாராட்டுகளையும் தெரிவித்தார்

## சென்னை -ரூ.65 லட்சம் பணத்துடன் தப்பிச் சென்ற தங்க நகைக்கடை ஊழியர் திருநங்கையுடன் கைது

சென்னை:மே,14-

ரூ.65 லட்சம் பணத்துடன் தப்பிச் சென்ற தங்க நகைக்கடை ஊழியர் திருநங்கையுடன் கைது செய்யப்பட்டார். சென்னை, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு பகுதியில் வசித்து வருபவர் நிகல் சந்த் ஜெயின் (51). சென்னை, என்எஸ்சி போஸ் சாலையில் தங்கம் மற்றும் வெள்ளி நகைக்கடை நடத்தி வருகிறார்.இவரது கடையில் 4 வருடங்களாக பழைய வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த நவீன் (28) என்பவர் வேலை செய்து வருகிறார். கடந்த 6ம் தேதி நிகல்சந்த் ஜெயின், தனது தங்கை கணவரிடம் சென்று, 26 கிலோ வெள்ளிக் கட்டியை பெற்றுக் கொண்டு, மின்ட் தெருவில் உள்ள திலீப் என்பவரிடம் கொடுத்துவிட்டு, அவரிடமிருந்து பணம் ரூ.65 லட்சம் பெற்று தன்னிடம் அதை கொடுக்குமாறு நவீனிடம் கூறி அனுப்பி வைத்தார்.

அதன்படி, நவீன் ரூ.65 லட்சம் பெற்றுக் கொண்டார். ஆனால், அந்த பணத்தை முதலாளியிடம் கொடுக்காமல் நவீன் தலைமறைவானார். இதுகுறித்து, நிகல் சந்த் ஜெயின் யானைக்கவுனி காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். நீலகிரி மாவட்டம், ஊட்டியில் பதுங்கி இருந்த நவீனை போலீஸார் கைது செய்து சென்னை அழைத்து வந்தனர்.விசாரணையில், அவர் சமீபத்தில் பழக்கமான ராயபுரத்தைச் சேர்ந்த திருநங்கை பிரார்த்தனா (19) என்பவருடன் சேர்ந்து திட்டமிட்டு, ரூ.65 லட்சம் பணத்துடன் தலைமறைவானது தெரியவந்தது.முன்னதாக, பிரார்த்தனாவிடம் ரூ.63 லட்சத்தை கொடுத்துவிட்டு, ரூ.2 லட்சத்துடன் நவீன் தலைமறைவாகி இருந்தார். இதையடுத்து, நவீன் பிடிபட்ட நிலையில், திருநங்கையான பிரார்த்தனாவும் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து ரூ.53 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. இருவரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

## தூத்துக்குடியில் பயங்கரம்: கல்லறை தோட்டத்தில் வாலிபர் வெட்டிக் கொலை

தூத்துக்குடி: மே,14-

தூத்துக்குடியில் இரவில் சிஎஸ்ஐ கல்லறை தோட்டத்தில் வாலிபர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். நண்பர்களுக்கிடையே போதை தகராறில் கொலை நடந்ததா? என போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். தூத்துக்குடி ஸ்டேட் பாங்க் காலனி, முல்லை நகர் பகுதியில் சிஎஸ்ஐ கல்லறை தோட்டம் உள்ளது. இந்த தோட்டத்தில் 35 வயது மதிக்கத்தக்க வாலிபர் ஒருவர் இறந்து கிடப்பதாக தூத்துக்குடி சிப்காட் போலீசுக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர்.

இதில் இறந்து கிடந்த வாலிபரின் கழுத்து மற்றும் தாடைப்பகுதியில் வெட்டுக் காயங்களுடன் அவர் கொலை செய்யப்பட்டு கிடந்தார். அவரது உடல் அருகே காலி மதுபாட்டில்கள், வாட்டர் பாட்டில்கள் ஆகியவை கிடந்தன. இதனால் இறந்த நபர் நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்திய போது ஏற்பட்ட தகராறில் இந்த கொலை நடந்துள்ளது, தெரியவந்துள்ளது. மேலும் இறந்து கிடந்த வாலிபர் யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர்? என்பது தெரியவில்லை. இதையடுத்து மோப்பநாய் 'ஜிஞ' வரவழைக்கப்பட்டது.

அந்த மோப்பநாய் வாலிபர் இறந்து கிடந்த இடத்திலிருந்து கல்லறை தோட்டத்தின் நுழைவு வாயில் வரை சென்று நின்று விட்டது. யாரையும் கவ்விப் பிடிக்கவில்லை. எனவே கல்லறை தோட்டத்தின் வாசலில் இருந்து கொலையாளிகள் காரில் சென்றிருக்கலாம் என்று போலீசார் கருதுகின்றனர். இந்த கல்லறை தோட்டம் அருகே மாநகராட்சிக்கு சொந்தமான 'செம்பார்க்' உள்ளது. இந்த பார்க்கில் உள்ள சிசிடிவி கேமிராக்களை சிப்காட் போலீசார் ஆய்வு செய்து கொலையாளிகளை தேடி வருகின்றனர்

## அரசு அலுவலகங்களில் மட்டும் கைவரிசை; கணினி, பிரிண்டர்களை திருடி விற்று ஆடம்பரமாக வாழ்ந்த மாணவன்

### போலீஸ் சோதனையில் சிக்கினார்

சித்தூர்:மே,14-

அரசு அலுவலகங்களில் உள்ள கணினிகள், பிரிண்டர்களை திருடி ஆன்லைனில் விற்று ஆடம்பரமாக வாழ்ந்த இன்ஜினியரிங் மாணவனை போலீசார் கைது செய்தனர்.ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் எஸ்.ஆர்.புரத்தில் உள்ள அரசு அலுவலகத்தில் மடிக்கணினிகள் திருட்டு போனதாக போலீசாருக்கு புகார் வந்தது. அதன்பேரில் 4 தனிப்படைகள் அமைத்து குற்றவாளிகளை தேடும் பணியில் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் எஸ்.ஆர்.புரம் காவல் நிலைய போலீசார் மத்திய கிராஸ் பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வவழியாக வந்த இருசக்கர வாகனத்தை நிறுத்தி அதில் வந்தவரிடம் விசாரணை நடத்தினர். மேலும் பைக்கில் நடத்திய சோதனையில் மடிக்கணினிகள் இருந்தது தெரியவந்தது. இதுதொடர்பாக நடத்திய விசாரணையில் பிடிபட்டவர், கன்னியாகபுரம் கிராமத்தை சேர்ந்த மகேஷ்பாபு (20), இன்ஜினியரிங் மாணவன் என்பது தெரியவந்தது. இவர் அரசு அலுவலகங்களில் கணினிகள், பிரிண்டர்களை திருடியதை ஒப்புக்கொண்டார். இதையடுத்து அவரிடமிருந்து 30 பிரிண்டர்கள், கணினிகள், ஒரு பைக் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. மாணவர் மகேஷ்பாபு சித்தூர் மற்றும் திருப்பதி மாவட்டங்களில் உள்ள அரசு அலுவலகங்களில் திருடி வந்துள்ளார். திருடிய பொருட்களை விற்று சம்பாதித்த பணத்தை ஆன்லைன் சூதாட்டம் மற்றும் ஆடம்பர வாழ்க்கைக்காக செலவழித்துள்ளார். திருடப்பட்ட பிரிண்டர்கள் மற்றும் மடிக்கணினிகளை ஓஎல்எக்ஸ் செயலியில் பழைய பொருட்கள் என பதிவேற்றம் செய்து விற்றுள்ளார். சித்தூர், திருப்பதி, அன்னமையா ஆகிய 3 மாவட்டங்களில் 18 அரசு அலுவலகங்களில் திருட்டில் ஈடுபட்டது விசாரணையில் தெரியவந்தது

## "மேம்பட்ட பொருள் அமைப்புகள் மற்றும் பொறியியல் தீர்வுகளுக்கான எலாஸ்டோமர்கள்" என்ற தலைப்பில் தேசிய அளவிலான தொழில்நுட்ப செமினார்





செங்கல்பட்டு,மே,14-

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் பி. எஸ். அப்துர் ரஹ்மான் கிரெசன்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தின் பாலிமர் பொறியியல் துறை மற்றும் பாலிமர் பொறியாளர்கள் சங்கம் (APE) இணைந்து "மேம்பட்ட பொருள் அமைப்புகள் மற்றும் பொறியியல் தீர்வுகளுக்கான எலாஸ்டோமர்கள்" என்ற தலைப்பில் தேசிய அளவிலான தொழில்நுட்ப செமினாரை 2026 மே 12ஆம் தேதி, பாலிமர் பொறியியல் துறை செமினார் ஹாலில் சிறப்பாக நடத்தினர். அப்பல்லோ டயர்ஸ் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் காம்பவுண்ட் டெவலப்மெண்ட் துறை தலைவர் டாக்டர் ஜோதி பிரகாஷ் ரத் மற்றும் மேலாளர் டாக்டர் தமிழ்செல்வன் நடராஜன் ஆகியோர் சிறப்பு உரையாற்றினர்.

நிகழ்ச்சியில் டீன் (SMS) டாக்டர் ஹெச். சித்தி ஜைலானி அவர்கள் தலைமை உரையாற்றினார். சேர்க்கை இயக்குநர் டாக்டர் எஸ்.எஸ்.எம். அப்துல் மஜீத் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். துறைத் தலைவர் (பொறுப்பு) டாக்டர் சு. ஷம்ஷாத் பேகம் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். இந்நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளராக ஜெ. டாஃபினி அவர்கள் செயல்பட்டார்.இச்செமினாரில் மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் தொழில்துறை நிபுணர்கள் கலந்து கொண்டு பாலிமர் பொறியியல் துறையில் நடைபெற்று வரும் சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிகள் குறித்து கலந்துரையாடினர்.

## தண்டவாளத்தில் கிடந்த இரும்பு ஏணியில் ரயில் மோதிய சம்பவம் இருவர் கைது



கோவை:மே,14-

கோவை வடக்கு மற்றும் பீளமேடு ரயில் நிலையங்களுக்கு இடையேயான தண்டவாளத்தில் அலுமினிய ஏணியை வைத்து விவகாரத்தில், இருவரை ரயில்வே பாதுகாப்புப் படை போலீசார் கைது செய்துள்ளனர்.கடந்த மே 9ஆம் தேதி மாலை 5.30 மணி அளவில் அதிவிரைவு ரயில் வந்தது. அப்போது, தண்டவாளத்தில் வைக்கப்பட்டிருந்த அலுமினிய ஏணி மீது அந்த ரயில் மோதியுள்ளது. இதனால், அவசர கால பிரேக் மூலம் ரயில் நிறுத்தப்பட்டது. சேதமடைந்த அந்த ஏணியை பாதுகாப்புப் படையினர் அப்புறப்படுத்தினர். பின்னர், அந்த ரயில் மீண்டும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது.

இதுதொடர்பாக ரயில்வே பாதுகாப்புப் படை போலீசார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தினர். மேலும், அந்தப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தபோது, அதில் இருவரது உருவம் பதிவாகியிருந்தது. இதைத்தொடர்ந்து ரத்தினபுரி ரயில்வே மேம்பாலப் பகுதியில் ரயில்வே பாதுகாப்புப் படை மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்

அப்போது அந்தப் பாலத்துக்கு அடியில் சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் தங்கியிருந்த வீரகேரளம் பகுதியைச் சேர்ந்த நாகராஜ் (35), காரமடை பகுதியைச் சேர்ந்த கந்தசாமி (45) ஆகிய இருவரைப் பிடித்து விசாரணை நடத்தினர். மேலும் கண்காணிப்பு கேமரா காட்சிகளையும் ஆய்வு செய்தபோது இவர்களின் உருவம் ஒத்துப்போனது. இதையடுத்து அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், மது பாட்டில்கள் மற்றும் பழைய இரும்புப் பொருள்களை சேகரித்து விற்பனை செய்யும் இவர்கள், கடந்த 9ஆம் தேதி ஓர் அலுமினிய ஏணியை பழைய இரும்புக்கடையில் விற்க முயன்றுள்ளனர். ஆனால், கடைக்காரர் அதை முழுமையாக வாங்க மறுத்து, துண்டு துண்டாக கொண்டுவருமாறு கூறியதால். இவ்வாறு செய்ததாக கைதான இருவரும் கூறியுள்ளனர். இதையடுத்து, இருவரையும் போலீஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி பின்னா சிறையில் அடைத்தனர்

## சைபர் அட்டாக்கில் இருந்து தப்பிக்க சாட் ஜிபிடியில் புதிய அம்சம் அறிமுகம்




ஹேக்கிங் (Hacking), HSƒ (Phishing) மற்றும் இணையத் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் புதிய வசதி சாட் ஜிபிடியில் சேர்க்கப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பம் உலகளவில் மிக வேகமாக வளர்ந்து வரும் நிலையில் செயற்கை நுண்ணறிவு பயன்பாடும் மக்களிடையே அதிகரித்துள்ளது.. பல ஏஜக்கள் இருந்தாலும் சாட்ஜிபிடி (chatgpt) முன்னிலை வகிக்கிறது. ஓபன் ஏ.ஐ. நிறுவனம் தனது சாட் ஜி.பி.டி. மற்றும் கோடெக்ஸ் (Codex) பயனர்களுக்காக மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு அம்சத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஹேக்கிங் மற்றும் பிஷிங் (Hacking & Phishing) போன்ற இணையத் தாக்குதல்களிலிருந்து கணக்குகளை பாதுகாக்கும் நோக்கில் கூடுதல் பாதுகாப்பு தேவைப்படுவோருக்கு இது விருப்பத் தேர்வாக (opt-in) வழங்கப்படுகிறது.

இந்த புதிய அம்சம் செயல்படுத்தப்பட்டவுடன், வழக்கமான பாஸ்வேர்ட் லாகின் (Password Login) முறைக்கு பதிலாக பாஸ் கீ வசதியை வழங்க உள்ளனர். மேலும் சந்தேகமான நடவடிக்கைகளை தடுக்கும் தொழில்நுட்பமும் மேம்படுத்தப்பட உள்ளது. இந்த வசதி, பயனர்களின் தனியுரிமையையும், கணக்கு பாதுகாப்பையும் அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்லும் நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது

## இளநிலை பாடப்பிரிவு மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது

மானாமதுரை,மே,14-

மானாமதுரையில் தமிழ்நாடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2026 2027ஆம் கல்வியாண்டிற்கான இளநிலை பாடப்பிரிவு மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணாக்கர்கள் www.tngasa.com என்ற இணையதளம் மூலம் 07.05.2026 முதல் 29.05.2026 வரை விண்ணப்பிக்கலாம். இதனை அடுத்து மானாமதுரை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர் சேர்க்கை உதவி மையம் கல்லூரி முதல்வர் முனைவர்.வீ.கோவிந்தன் தலைமையில் தொடங்கப்பட்டுள்ளது. எனவே, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர விருப்பமுள்ள மாணவர்கள் சேர்க்கை உதவி மையத்தை அணுகி இணையவழி வாயிலாக விண்ணப்பித்து உரிய ஆலோசனையை இலவசமாக பெற்று பயன்பெறலாம். மேலும் விண்ணப்பிக்கத் தேவையான ஆவணங்களின் விவரங்கள் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் உள்ளது என்பதையும் கல்லூரி முதல்வர் தெரிவித்துள்ளார்.



## எக்ஸ் தளத்தில் அரசியல் பதிவுகளை நீக்கும் உத்தரவுக்கு தடை: சென்னை உயர் நீதிமன்றம்

சென்னை:மே,14-

அரசியல் ரீதியாக கருத்துக்களை பதிவிடும் எக்ஸ் தள கணக்குகளை முடக்கிய உத்தரவுக்கு ஐகோர்ட் இடைக்கால தடை விதித்துள்ளது. தமிழக அரசை விமர்சித்து கருத்துகளைப் பதிவிட்டதாகக் கூறி அதுதொடர்பாக எக்ஸ் தள பக்கங்களில் இடம்பெற்ற கணக்குகளை முடக்க தமிழக சைபர் கிரைம் பிரிவு கடந்த மே 8 ஆம் தேதி எக்ஸ் தளத்துக்கு உத்தரவிட்டிருந்தது. Rail Freightஇதை எதிர்த்து விஷ்வ இந்து பரிஷத் வட தமிழகத்தின் தலைவர் சொக்கலிங்கம் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.அவரது மனுவில், அரசியல் ரீதியான விமர்சனங்களை முறையாக ஆய்வு செய்யாமல், பொது அமைதிக்கு பாதிப்பு ஏற்படுவதாக கூறி எக்ஸ் தள கணக்குகளை முடக்குவது கருத்துரிமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயல் என அந்த மனுவில் குறிப்பிட்டிருந்தார்.மேலும் வன்முறையை தூண்டும் விதமாகவோ, பொது அமைதிக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலோ இல்லாத விமர்சனங்களை பதிவிட்ட எக்ஸ் தள கணக்குகளும் முடக்கப்பட்டுள்ளன, இது சட்டவிரோதமானது என்று அந்த மனுவில் சுட்டிக்காட்டியிருந்தார். மேலும் அரசியல் ரீதியாக கருத்துக்களை பதிவிடும் எக்ஸ் தள கணக்குகளை முடக்கிய உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று அவர் அந்த மனுவில் கேட்டுகொண்டுள்ளார்.இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்த போது எக்ஸ் தள கணக்குகள் முடக்கப்பட்டது தொடர்பாக சம்பந்தப்பட்ட பயனாளர்களுக்கும் எதற்காக முடக்கப்பட்டது என்ற தகவல்களும் தெரிவிக்கப்படவில்லை என மனுதாரர் வழக்கறிஞர் வாதிட்டார். இதையடுத்து வாதங்களை கேட்ட நீதிபதிகள் இந்த உத்தரவில் சட்ட விதிகள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் வேறு எந்த விவரங்களும் குறிப்பிடப்படவில்லை என்று கூறி அந்த நோட்டீஸ்க்கு இடைக்கால தடை விதித்தனர்.

இந்த மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், அரசியல் ரீதியான கருத்துகளை பதிவிடும் எக்ஸ் கணக்குகளை முடக்க, எக்ஸ் நிறுவனத்துக்கு தமிழ்நாடு சைபர் கிரைம் போலீசார் அனுப்பிய நோட்டீசுக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது. 18 சமூக தளங்களின் முடக்கத்தை நீக்க வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும் இந்த விவகாரத்தில் தமிழ்நாடு அரசு மற்றும் காவல்துறை பதிலளிக்கவும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

## முத்துப்பேட்டை அருகே ரயில் அடிபட்டு மூதாட்டி பலி

திருவாரூர்:மே,14-

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை அடுத்த தம்பிக்கோட்டை கீழக்காடு கிராமத்தை சேர்ந்தவர் தங்கராசு மனைவி குப்பம்மாள்(80) இவர் இன்று மாலை சுமார் 5.50மணிக்கு அப்பகுதியில் உள்ள ரயில்வே பாதையில் பட்டுக்கோட்டையிலிருந்து திருவாரூர் செல்லும் டெமு ரயிலில் சென்றுக்கொண்டிருந்தபோது அங்குள்ள ரயில்வே கேட் அருகே உள்ள ரயில்வே தண்டவாளத்தில் மாடு ஒன்று நின்றதை நின்றதை கண்ட மூதாட்டி குப்பம்மாள் மாட்டை விரட்ட சென்றபோது எதிர்பாராதவிதமாக அப்பகுதியில் கடந்த அந்த ரயில் மோதி தூக்கி வீசப்பட்டார். இதில் மூதாட்டி உடல் சிதைந்து பலியானார்.சிவீஹீ - Local Guides



இதனை கண்ட அப்பகுதி மக்கள் முத்துப்பேட்டை காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர் அங்குவந்த போலீசார் இதுகுறித்து விசாரணை மேற்கொண்டு திருவாரூர் ரயில்வே போலீசாருக்கு தகவல் அளித்தனர் அதன்பேரில் அங்குவந்த ரயில்வே போலீசார் மூதாட்டியின் உடலை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை மேற்கொண்டுள்ளனர் இச்சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161